**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கீரனூர்.**

**அசல் வழக்கு எண்.32/**2023

2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 22ம் நாள் 1872 ஆண்டு சட்டத்தின் பிரிவு 58ன் ஏற்பாட்டின்படி வாதி தரப்பு சாட்சியாக வா.சா.1ன் வாக்குமூலம் சாட்சியாக திரு.D.அருள்முருகன், இளநிலை உதவியாளர் என்பவரால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | லட்சுமி | கணவர் பெயர் : | முருகேசன் |
| கிராமம் : | குளவாய்பட்டி | தாலுகா : | குளத்தூர் |
| வயது : | 70 | தொழில் : | விவசாயம் |

**நாள் : 22.07.2026**

வா.சா. : 1

**(சாட்சி சாட்சியம் அளிக்கும் போது அவரது சாட்சியத்தை நேரடியாக அவரும் அவரது வழக்கறிஞரும் பார்க்கும் விதமாக கணினி திரை தனியாக அவர் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. சாட்சி ஆஜர்படுத்தப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்).**

<u>2ம் **பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**</u>

1) வழக்கு சொத்துகளையும் உள்ளிட்ட சொத்துக்களையும் நானும் எனது சகோதரர்களான துரைராஜ் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் 4ம் பிரதிவாதியின் வங்கியில் 2006ம் வருடம் அடமானம் வைத்தோமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி அடமானம் வைத்ததை மீட்பு செய்து ரசீது வைத்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கு சொத்துக்களை அடமானம் வைத்ததை மீட்பு செய்வதற்கு 1ம் பிரதிவாதி சுப்பிரமணி மற்றும் துரைராஜ் என்னை அழைத்தார்களா என்றால் இல்லை. மேற்படி அடமானத்தை மீட்க வேண்டும் என்று 1ம் பிரதிவாதியிடமோ அல்லது துரைராஜிடமோ கேட்டேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் கடலை சாகுபடி செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2) கடந்த 07.01.2023ம் தேதியில் நான் 1ம் பிரதிவாதி சுப்பிரமணியை அணுகி 4ம் பிரதிவாதி வங்கியில் உள்ள சொத்துக்களை மீட்க வேண்டும் என்றும் அழைத்தேனா என்றால் இல்லை. 2006ல் ஆண்டு நானும் 1ம் பிரதிவாதி சுப்பிரமணி எனது மற்றொரு சகோதரர் துரைராஜும் 4ம் பிரதிவாதி வங்கியில் அடமானம் வைத்த அடமானம் பத்திரம் என்றால் சரிதான் அது **<u>பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**. நானும்,

துரைராஜும், சுப்பிரமணியும் சேர்ந்து கடந்த 11.01.2023ம் தேதியன்று வழக்கு சொத்தை மற்றும் தவிர்த்து மற்ற சொத்துக்களை 4ம் பிரதிவாதி வங்கியிலிருந்து மீட்டுக்கொண்டோம் என்றால் ஆமாம். வழக்கு சொத்துக்களை தவிர்த்து மற்ற சொத்துக்களை மட்டும் மீட்டுக்கொண்டதற்கான காரணம் என்னவென்றால் நாங்கள் நல்லாயிருப்பதற்காக மீட்டுகொண்டோம்.

3) நான் 1ம் பிரதிவாதி சுப்பிரமணி மற்றும் என்னுடைய சகோதரரான துரைராஜ் என்பவருக்கு எதிராக அனைத்து சொத்துக்களையும் பாகம் வேண்டும் என்றும் வழக்கு தாக்கல்செய்துள்ளோம் என்றால் சரிதான். நான் பாகம் பிரிவினை பரிகாரம் கோரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் பாகம் பிரிவினை பரிகாரம் கோராமல் வேறு பரிகாரம் கோரியிருந்தால் அது தவறு என்றால் ஆமாம். நான் 1ம்பிரதிவாதி சுப்பிரமணி ஆகியோரிடம் பாகம்பிரித்து தரக்கோரி எத்தனை வருடங்களாக கேட்டு வருகிறேன் என்றால் 10 வருடங்களாக கேட்டு வருகிறேன். மேற்படி 10 வருடங்களாக பாகம் பிரித்து தரக்கோரி கேட்டு வருகிறேன் என்ற விபரத்தை என்னுடைய வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4) வழக்கு சொத்திற்கு 1ம் பிரதிவாதி சுப்பிரமணியின் பெயரில் தான் பட்டா மற்றும் வரி ரசீதுகள், சாகுபடி அடங்கல் இருந்தது என்றால் ஆமாம். மேற்படி 1ம் பிரதிவாதி சுப்பிரமணி பெயரில் உள்ள ஆவணங்களை வில்லங்கம் பார்த்த பிறகு தான் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடமிருந்து வழக்கு சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதியிடமிருந்து 3ம் பிரதிவாதி கிரையம் வாங்கி வழக்கு சொத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி 1ம் பிரதிவாதியிடமிருந்து 2 பிரதிவாதி வழக் குசொத்தை கிரையம் வாங்கியதையும் 2ம் பிரதிவாதியிடமிருந்து 3ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் வாங்கியதை வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடமிருந்து நல்லெண்ணத்தின் அடிப்படையில் தான் கிரையம் வாங்கி அனுபவம் செய்து வந்தார் என்றும் அதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதியிடமிருந்து 3ம் பிரதிவாதி வில்லங்கம் இல்லை என்று சரி பார்த்த பிறகு தான் கிரையம் வாங்கினார் என்றும் சொன்னால் சரியல்ல. 1ஏக்கர் கொடுத்ததை 1 1/2 ஏக்கர் கொடுத்ததாக பத்திரம் எழுதிவாங்கியுள்ளார். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 1ஏக்கர் கொடுத்ததை 1 1/2 ஏக்கருக்கு பத்திரம் பதிந்து

கொடுத்ததால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம்.

5) நானும் 1ம் பிரதிவாதியும் 2ம் பிரதிவாதியிடம் 1/2 ஏக்கர் கூடுதலாக வாங்கியதைபற்றி கேட்டோமா என்றால் துரைராஜ் தான் கேட்டார். மேற்படி துரைராஜ் எத்தனை வருடங்களுக்கு முன்பு 2ம்பிரதிவாதியிடம் கேட்டார் என்றால் கிரையம் வாங்கி 2 வருடத்திற்குள் கேட்டார். மேற்படி விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள முதல்விசாணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியிடம் கிரையம் கொடுக்கும் போது 1ம் பிரதிவாதி சுப்பிரமணி பணம் கேட்டார் என்றும் 2ம்பிரதிவாதி பணம் கொடுக்க முடியாதுஎன்று சொல்லியததால் தான் 1ம் பிரதிவாதி என் மூலம் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள வழக்குமூலமும் சங்கதிகளும் பொய்யானவை என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me in open court interpreted/read over to the witness and acknowledged by him/her and found correct.

K.SARMISHTA Digitally signed by K.SARMISHTA Date: 2026.07.22 15:18:22 +0530

**District Munsif**
**Keeranur.**